# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 14/2022 | Date : 14.08.2026 | RW 1 |
|---|---|---|
| Name: ஜெயலட்சுமி | க/பெ.செல்வம் | |

## மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்த தர்மராஜ் எனது மகன் ஆவார். எனது மகன் விபத்தில் இறந்துவிட்டதால் அதற்கான இழப்பீடு கோரி அவருடைய மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் எனது மருமகள் என்றால் எனது மகன் திருமணம் செய்த விவரமே எனக்கு தெரியாது. நான் கொளத்தூர் போண்டாமார்க்கெட்டில் வசித்து வருகிறேன். என் மகன் 9.10.2021 ந்தேதி விபத்தில் இறந்து விட்டார். விபத்து நடந்து 8 நாட்கள் உயிருடன் இருந்தார். அவர் 8 நாட்களும்மருத்துவமனையில் இருந்தார். அதன்பிறகு விபத்தினால் 2 கால்களையும் இழந்து சிகிச்சையில் இருந்தபோது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அப்போது சுயநினைவுடன் தான் இருந்தார். எந்த வாகனம் மோதி எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டது என்றால் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் குறித்து எனக்கு தெரியாது. எனது மகன் விபத்து நடந்து 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தபோது சென்னையில் உள்ள இழப்பீடு தீர்ப்பாயத்தில் MCOP 4517/2021 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரரும் நானும் தான் வாரிசு என்று மேட்டூர் வட்டாட்சியரால் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அது ம.சா.ஆ.13 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகனுக்கும் மனுதாரருக்கும் திருமணத்தின் போது எடுக்கப்பட்டுள்ள புகைப்படம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து தெரியாது. வட்டாட்சியர் வழங்கிய சான்றிதழுக்கு எதிராக மேல் முறையீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் வழங்கிய சான்றிதழுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யாததால்தான் அதற்கான ஆவணம் என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. என் மகன் உயிரோடு இருக்கும் போதே மனுதாரரை திருமணம் செய்து கொண்டதாகவும் அவருடன் சேர்ந்து வாழ முடியவில்லை என்று விவாரகரத்து மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எனது மகனே மனுதாரரை திருமணம் செய்ததாக கூறி விவாகரத்து மனு தாக்கல்செய்திருக்கும்பட்சத்தில் அந்த திருமணம் குறித்து எனக்கு தெரியாது என்றும் திருமணமே நடைபெறவில்லை என்று மறுத்து சாட்சியமளிப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. மனுதாரரை எனது மகன் திருமணம் செய்தது எனக்கு பிடிக்கவில்லை என்றாலும் அதனால்தான் என் மகனை நானே வற்புறுத்தி விவாகரத்து செய்ய வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. மனுதாரரும் எனது மகனும்

சென்னையில்தான் குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றும் விபத்து நடந்த சமயம் இருவரும் சென்னையில்தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. விபத்து நடந்து என் மகன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து இறக்கும்வரை மனுதாரர் உடன் இருந்தார் என்றாலும் இறுதி சடங்கில் கலந்துகொண்டார் என்றாலும் சரியல்ல. நான் மனுதாரரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கில் இழப்பீடுதொகை அவருக்கு கிடைக்ககூடாது என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் இறந்து போன தர்மராஜின் சட்டபூர்வமான வாரிசு என்றாலும் அவருக்கு உரிய நஷ்டஈடு கிடைட்க்கவேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் இறந்துபோன தர்மராஜின் மனைவி இல்லை என்று சொல்வதற்கு எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் மனுதாரர் இழப்பீடு தொகை பெறுவதற்கு தகுதியானவர் என்றால் சரியல்ல.

ஒம்/—ஜெயலட்சுமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.